பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை 17.11.2023 கதிர் 371

# பல்கலை உருவாக்கும் அதிகாரத்தை மாகாணத்துக்கு வழங்க கடும் எதிர்ப்பு

## ஷரியா மற்றும் மூளைச் சலவை பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும் என சரத் வீரசேகர எம்.பி. எச்சரிக்கை

பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு, நாட்டின் பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டால் கிழக்கில் ஷரியா பல்கலைக்கழகமும் வடக்கில் மூளைச்சலவை செய்யக்கூடிய பல்கலைக்கழகமும் தொடங்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார். ☞ 2

## இ னி து ரகசியம் அல்ல!

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பாசிச அமைப்பு என்று இளம் சடத்தரணியான சுவாஸ்திகா அருளிங்கம் தெரிவித்த கருத்துக்களின் சர்ச்சைகளே இன்னும் ஓய்ந்தபாடில்லை அதற்கிடையில் மற்றொரு சர்ச்சை கிளம்பியுள்ளது. நடிகை குஷ்பு புலிகள் குறித்துத் தெரிவித்த கருத்துக்காக அவர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் அருந்தந்தை ம.சக்திவேல்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களின் ஆதரவாளர், மனித உரிமைகளுக்காகக் -குரல் கொடுப்பவர் என்று அடையாளப்படுத்தப் பட்டுள்ளவரான சகத்திவேல், இது தொடர்பில் ஒரு அறிக்கையை விடுத்துள்ளார்.

"வடகிழக்கு தமிழர்களின் தாயகம் காக்க உயிர் தியாக மாணவர்களை நினைவு கூர்ந்து ஈகைச் ☞ 2

## தேர்தல் திருத்த பரிந்துரைகளை அனுப்பலாம்

தேர்தல் திருத்தம் தொடர்பான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை நேற்று முதல் டிசெம்பர் 15 வரை மக்கள் முன்வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலாளர், தேர்தல்கள் சட்டங்களைத் திருத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ☞ 2

# கோப் குழுத் தலைவருக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் போர்க்கொடி

### அவர் பதவியில் நீடிப்பது பிரச்சினை என்கிறார்

கோப்குழுவின்தலைவரானநாடாளுமன்றஉறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தான் கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராகத் தான் பணியாற்றினார் என்பதை மறைத்து, இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு எதிரானவிசாரணையை முன்னெடுத்ததன்மூலம் நம்பகத் தன்மையை இழந்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் குற்றங்சாட்டினார்.

இந்த நிலையில் அவர் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தின் விசாரணைக்குழுவான கோப் குழுவின் தலைவராக நீடிப்பதும் பிரச்சினைக்குரிய விடயம்தான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுவியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:

கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராக பணியாற்றியுள்ள கோப்குழுவின் தலைவர்ரஞ்சித்பண்டார, இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகத்தினர் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது தனக்கும் கிரிக்கெட் சபைக்குமான முன்னைய இந்தத் தொடர்பு குறித்து எதனையும் வெளிப்படுத்தவில்லை.

அப்படி, இலங்கைக் கிரிக்கெட்டுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவரான கோப்குழுவின்தலைவர், தொடர்ந்தும் அந்தப் பதவியில் நீடிப்பது பிரச்சினைக்குரியது.

நாட்டுமக்களின் ☞ 2

# வடக்கில் 7 ஆயிரம் பேர் வருடாந்தம் உயர் தரக் கல்வியுடன் இடைவிலகல்

### என்.வி.கியூ. மூலம் உயர் நிலையை அடையலாம் என்கிறார் பிரதம செயலர்

வடக்கில்வருடாந்தம் 7ஆயிரம் மாணவர்கள் தமது உயர் கல்வியை தொடராது இடை விலகுகின்றனர் என வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன சுட்டிக்காட்டியுள்ளார். அவர்கள்தேசியதொழில் தகைமைச் சான்றிதழ் கற்கை ஊடாக ஒரு பட்டதைப் பெற்று அரச சேவையில் உயர் பதவிகளைப் பெற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாண கிராமியஅபிவிருத்தி ☞ 2

# விளக்கமறியல் நீடிப்பு

இந்தியாவில்இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக நாட்டுக்குள் நுழைந்த குடத்தனையைச்சேர்ந்த மூவரின்விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 33 ஆண்டுகளாகஅகதிகளாக தஞ்சமடைந்திருந்த இந்த மூவரும் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பியிருந்தனர். யாழ். மாவட்டம், வடமராட்சி கிழக்கு, குடத்தனையை சேர்ந்த இந்த மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரையின் உத்தவின் பேரில் ☞ 8

### கோப் குழு தலைவர் தொடர்பான

# சஜித்தின் குற்றச்சாட்டை ஆதரித்து தயாசிறி எம்.பியும் போர்க்கொடி

கோப் குழுவின் தலைவர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை. ஆகவே கிரிக்கெட் தொடர்பான விசாரணைகள்கோப்குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தலைமையில் முன்னெடுக்கப்படுமாயின் கோப் குழுவில் இனிநாங்கள்பங்குப்பற்ற போவதில்லை. எனவே உரிய தீர்மானத்தை எடுங்கள்.

இவ்வாறு சபாநாயகரிடம்வலியுறுத்தினார் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

இதன்போது, கோப் குழுவின் தலைவரின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. ஆகவே கிரிக்கெட் சபை தொடர்பான விசாரணைகளை அவர் தலைமையில் முன்னெடுப்பது முறையற்றது. பதில் ☞ 2

# உயிருக்கு எமனான உடற்பயிற்சிக் கருவி

உடற்பயிற்சியின் போது அதிக நிறை கொண்ட உடற்பயிற்சிக் கருவி கழுத்தில் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார் என்று புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

உடற்பயிற்சிக் கூடத்தில் நெஞ்சுத் தசைகளை விரிவாக்குவதற்கான 'பெஞ்ச' எனப்படும் பாரம்தூக்கும் உடற்பயிற்சியில் ஈடு-பட்டிருந்த ஒருவர் மீது, கைதவறி அவர் தூக்கியிருந்த எடைக் கம்பி வீழ்ந்ததில் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றது என்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

இருகைகளால்மேல் நோக்கித் தூக்கப்பட்ட அதிக நிறைகொண்ட கம்பி ஒன்றே ☞ 8

# ஜனாதிபதி ரணில் மாலைதீவுக்கு நேற்று பயணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை மாலைதீவுக்குப் பயணமானார். அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியான கலாநிதி மொஹமட் முய்ஸ்ஸின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

பதவியேற்புநிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் உடனடியாக ஜனாதிபதி நாடு திரும்புவார் எனத்தெரிய வருகிறது. எனவே இம்முறைபதில்அமைச்சர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் முய்ஸ் தெரிவுசெய்யப்பட் ☞ 2

# மேலும் 100 மருந்துகளுக்கு விரைவில் கட்டுப்பாட்டுவிலை

### சுகாதார அமைச்சர் சபையில் அறிவிப்பு

அத்தியாவசிய மேலும் 100 மருந்துகளுக்கு விரைவில் விலைக்கட்டுப்பாட்டுகள் விதிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ்பத்திரனதெரிவித்தார். விலை நிர்ணயம் தொடர்பான அதிகார சபைக்குஇதுதொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் ஏற்கனவே1-00மருந்துகளுக்கு விலை நிர்ணயம்செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர எம்பிய ☞ 8

# நாட்டில் 15 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோயினால் பாதிப்பு

நாட்டில் பல்கலைக்கழக மட்டத்தில் கடந்த மாதம்மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்இலங்கை சனத் தொகையில் ஒட்டுமொத்தமாக 15 சதவீதமானோர்நீரிழிவு நோயினால்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி சுகுணன் தெரிவித்தார்.

சுகாதாரஅமைச்சின் அனுசரணையுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம், மட்டக்களப்பு சுகாதார வைத்தியஅதிகாரிபணிம ☞ 8

# மன்னாரில் கனிய மணல் அழ்வை தடுக்க கடும் எதிர்ப்புக் காட்டுவோம்

### சாள்ஸ் எம்.பி. - சூளுரைப்பு

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவுக்குள் ஆஸ்திரேலியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று கனிய மணல்அகழ்வில்ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அந்த அமைப்பு என்ன முயற்சிகளை மேற்கொண்டாலும் மன்னார் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும்,சமூக அமைப்புக்களும்மணல்அகழ்வைத் தடுப்பதற்கான முழு முயற்சியையும் எடுப்போம்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில்சூளுரைத்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

மன்னார்தமிழ்அரசுக் கட்சி அலுவலகத்தில் புதன்கிழமைநடைபெற்ற மக்கள்சந்திப்பின்பின்னர் ஊடகங்களுக்குகருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சுடரேற்ற ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் உயிர் தியாகமானவர்களையும், அரசியல் கைதிகளையும், இவர்களில் சமூகமயமாகி கொண்ட கொள்கையில் நிலைத்து நிற்பவர்களையும், உயிர் தியாகிகளின் குடும்ப உறவுகளையும், மாவீரர் வாரத்திற்காக ஆயத்தப்படுபவர்களையும், தாயக கொள்கை அரசியலில் நிலைத்து நிற்பவர்களையும் கொச்சைப்படுத்தி அவமானப்படுத்தும் வண்ணமாக தென்னிந்திய நடிகை குஷ்பு அவர்கள் தமிழ் ஆயுத அமைப்பை பயங்கரவாதிகள்எனகூறியுள்ளதை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காக தேசிய அமைப்பு வன்மையாககண்டிப்பதோடுஇதற்கு அவர் மன்னிப்பு கோர வேண்டும் எனவும்வேண்டுகோள்விடுகின்றது." என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடுநின்றுவிடாது குஷ்புவே ஒரு பயங்கரவாதிதான் என்றும் ஒரே போடாகப் போட்டுவிட்டார் சக்திவேல். "தமிழர்களுக்கு எதிரான அரச கட்டமைப்பு பயங்கரவாதமே. இதனை கட்டிக் காக்கும் பேரினவாதமும் பயங்கரவாதமே. இதனை மையமாக வைத்து தமிழர்களை பல்வேறு வகையில் அழித்தும், இனப்படுகொலை செய்தும், தொடர்ந்து பல்வேறு முகங்களில் இன அழிப்பு போர் தொடுத்துக் கொண்டிருப்பவர்களே பயங்கரவாதிகள். இவர்கள் ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதிகளாக்குவதற்கு பயங்கரவாத தடை சட்டத்தை கொண்டு வந்ததோடு அதனை கடந்த 44 ஆண்டு காலமாக பாதுகாத்து வருகின்றனர். இவர்கள் வழியில் நின்று தமிழர்களுக்கு எதிரான கலாச்சார பண்பாட்டு இன அழிப்பு செய்ய வரும் குஷ்பும் அவர் குழுவினரும் பேரினவாத பயங்கரவாதிகளே. இவர்களும் இன அழிப்பு கருவிகளே.இவர்கள் யாரைப் பார்த்து, எந்தத் துணிவில் பயங்கரவாதிகள் என்கிறார்கள்?'' என்று கிழித்துத் தொங்கவிட்டிருக்கிறார்.

90ஸ் கிட்களின் கனவுக் கன்னியான, தமிழ்நாட்டில் போல இல்லையென்றாலும் மனசிலாவது கோயில் கட்டிக் கும்பிட்ட குஷ்பு ஒரு நடிகை என்பதைத் தாண்டி ஈழத் தமிழர் விவகாரத்தில் ஈடுபாடு காட்டியவரல்லர். அவருக்கு ஈழத் தமிழர்போராட்டம், வரலாறு குறித்து ஏதாவது தெரிந்திருப்பதற்கான வாய்ப்புக்கூட இருந்திருக்காது. வடநாட்டைச்சேர்ந்த நடிக்கையான அவர், நடிப்பதற்காகத்தமிழ்நாட்டுக்கு வந்து அங்கே திருமணம் செய்துகொண்டு தங்கிவிட்டவர். அரசியல் ஆசை காரணமாக கட்சிகள் தாவிக் கொண்டிருப்பவர். தமிழ்நாட்டின் அரசியலில் ஈழத் தமிழர் பிரச்சினை வகிக்கக்கூடிய செல்வாக்கு என்பதைத் தாண்டி அவருக்கு எம்மைப்பற்றிய வரலாறு போராட்ட இயக்கம் பற்றிய வரலாறுகளை கேள்விச் செவி என்பதற்கு மேலாகத்தெரிந்திருக்கவழியில்லை.

ராஜீவ் காந்தி கொலை என்பதைத் தாண்டி சிந்திக்கக்கூடியவராக அவர் இருக்கவும் வாய்ப்பில்லை. அதனால் அரைகுறைக் கேள்வி ஞானத்தில் அவர் ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பார். யாழ்ப்பாணம் வருகிறாராம். வரட்டும் வந்து பார்க்கட்டும் நிகழ்ச்சியில் மட்டும் கலந்துகொள்ளாமல், அவரை வழிநடத்திக் கூட்டி வரக்கூ-டிய கலா மாஸ்டரைப் போன்று முள்ளிவாய்க்காலில் வீதியோரம் நின்று படம் எடுத்துப் போடாமல் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து நேரடியாக அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டு எது பயங்கரவாதம் என்று தெரிந்துகொள்ளட்டும். அதன் பின்னர் தமிழ்நாட்டுக்குச் சென்று தன்கருத்துக்கள்குறித்துப்பேசட்டும்.

அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இடம்தருவார்களா என்பது தெரியாது. ஆனால் எமக்கொரு கடமை இருக்கிறது. அவர்களுக்கு உண்மைகளைப் புரியவைப்பது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமானரணில்விக்கிரமசிங்கவால் முன்மொழியப்பட்டுள்ள2024வரவு செலவுத் திட்டத்தில் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாகாண சபைகள் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கானஅதிகாரத்தைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட சரத் வீரசேகர, இது ஜனாதிபதியின் இந்த முன்மொழிவு தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்முன்வைக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஒருசில முன்மொழிவுகள் வரவேற்கத்தக்கவை.

கொழும்பு மாவட்டத்தில் தொடர் மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனை வரவேற்கத்தக்கது.

விவசாயிகளுக்கு காணி உரிமை வழுங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார். அதில்மாறுப்பட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் காணி உரிமையை முழுமையாக மக்களுக்கு உரித்தாக்குவதில்லை. ஏனெனில் காணி விவகாரம் நாட்டின் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது.ஆகவே காணி உரிமையை முழுமையாக வழங்காமல் நிபந்தனை அடிப்படையில் தற்காலிக உரிமத்தை மாத்திரம் வழுங்குவதே பொருத்தமானதாக அமையும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு பல்கலைக் கழகங்களைஉருவாக்கும்அனுமதி வழங்கப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிடுவது பாரதூரமானது. 13ஆவது திருத்தத்தில் கல்வி கட்டமைப்பில்பல்கலைக்கழகங்கள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்அதிகாரங்களை மாகாணங்களுக்குபகிர்ந்தளித்தால் கிழக்கு மாகாணத்தில் வாஹப் கொள்கையுடைய ஷரியா பல்கலைக்கழகம் கிழக்கு மாகாணத்திலும், மூளைச்சலவை செய்யும் பல்கலைக்கழகம் வடக்கு மாகாணத்திலும் தொடங்கப்படும்.

அரசியல்வாதிகள், மாகாண ஆளுநர்கள் தமக்கு ஏற்றாட் போல் பல்கலைக்கழகங்களை உருவாக்க முயற்சிப்பாளர்கள். ஆகவே மாகாணங்களுக்கு பல்கலைக்கழக அனுமதி என்ற யோசனை முறையற்றது என்பதை வெளிப்படையாக குறிப்பிடுவோம் என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு, இலக்கம்,21செமா கட்டடம், ஜனாதிபதி மாவத்தை கொழும்பு 01 என்ற முகவரிக்கு மக்கள் தமது யோசனைகள், பரிந்துரைகளை முன்வைக்க முடியும்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் தொலை பேசி அழைப்பின் ஊடாகவே வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கை - மாலைதீவு மக்களின் மேம்பாட்டிற்காக, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளை பலதரப்புகூட்டுச்செயன்முறைகளாக பலப்படுத்திக்கொள்ளவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அப்போது விருப்பம் தெரிவித்திருந்தார்.

## மன்னாரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவு பகுதிக்குள் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ஆஸ்திரேலியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று அகழ்வாய்வுப் பணியை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக எங்களுடைய எதிர்ப்பைகாண்பித்துவருகின்றோம். இந்த நிலையில் அண்மையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அமைச்சின் அழைப்பின் பேரில் பல்துறைகளை சேர்ந்த அதிகாரிகள் மன்னார் தீவுப் பகுதிக்குக் களப் பயணம்ஒன்றைமேற்கொண்டனர் என்று அறிந்தோம். அன்று நாடாளுமன்ற தினம் என்பதால் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று எங்களுடைய எதிர்ப்பை தெரிவிக்க முடியாத சூழ்நிலை இருந்தது.

அதேநேரம் அன்றைய நாள் நான் பிரதேச செயலாளரிடம் தொலைபேசியில்தொடர்புகொண்டு மன்னார்தீவினுடைய நிலப்பரப்பும் மன்னார் கடல் நிலப்பரப்பின் அமைவும்சம அளவாக இருப்பதால் இங்கு அகழ்பணி மேற்கொண்டால் தீவு அழிந்து போகும். எனவே வந்திருக்கும் அதிகாரியிடம் இதை தெரிவிக்கும்படியும் இங்கே அகழ்வு பணியை மேற்கொள்ள மாவட்ட அபிவிருத்தி குழுவின் அனுமதி கிடைக்காது, நாடாளுமன்ற உறுப்பினர்களின்எதிர்ப்புஇருப்பதால் இதைநடைமுறைப்படுத்த முடியாது என்பன போன்ற தகவல்களை அதிகாரிகளிடம்தெரியப்படுத்துமாறும் தெரிவித்திருந்தேன்.

இதற்கு அடுத்த நாள் நேரடியாக நான் கொழும்பில் வடமாகாண ஆளுநரை சந்தித்து இந்த மணல் அகழ்வு தொடர்பாகவும் மணல் அகழ்வுக்கானஆய்வுதொடர்பாகவும் எனது 100 வீத எதிர்ப்பை தெரிவித்த போது ஆளுநரும் அதனை ஏற்றுக்கொண்டிருந்தார்.

மன்னார் தீவின் நில அமைப்பை பொறுத்தவரையில் இங்கு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டால்எதிர்காலத்தில் மன்னார்தீவுஅழிவதற்குவாய்ப்பாக இருக்கும் என்பத ஆளுநர் ஏற்றுக் கொண்டார். எனவே இந்த முயற்சியை இந்த நிறுவனம் கைவிடவேண்டும்.

ஆளும் தரப்பு எவ்வளவு முயற்சி எடுத்தாலும் இங்குள்ள மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் சமூக அமைப்புகளும் இந்த கனிய மணல் அகழ்வை தடுப்பதற்கான முழு முயற்சியும் எடுப்பார்கள் -என்றார்.

## சஜித்தின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரை நியமியுங்கள் என எதிர்க்கட்சியின் உறுப்பினர்களும் சபாநாயகரிடம்வலியுறுத்தினார்கள்.

முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரியதீர்மானத்தைத்தான்எடுப்பார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூடியபோது, விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவின் செயற்பாடுகளை சுட்டிக்காட்டி அவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார உரையாற்றுகையிலும்கோப்குழுத் தலைவருக்கு எதிராகவே பேசினார். "நாடாளுமன்ற குழுக்களில் கோப் குழு கௌரவமானது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழுவுக்கு ஒருமுறை நான் முன்னறிவிப்பு இல்லாமல் சென்றதால் அவர் என்னை குழுவில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. அனுமதி பெற்றபின்னர் குழுநடவடிக்கையில் கலந்துக்கொள்ளுமாறு உறுதியாக அறிவித்தார். ஆனால் தற்போது பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையிலான கோப் குழுவுக்கு வருபவர்கள் யார் என்றே தெரியவில்லை.

கோப்குழுவின்நடவடிக்கைகளில் கலந்துக்கொள்ள ஊடகங்களுக்கு அனுமதிமறுக்கப்பட்டுள்ளநிலையில் கோப் குழுவின் தலைவரின் ஊடக செயலாளர்மற்றும்ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு எவ்வாறு அதில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது? கோப் குழுவின் கௌரவத்தை பாதுகாப்பதை விடுத்து பேராசிரியர் ரஞ்சித் பண்டார கோப் குழுவின் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து மோசடி செய்கிறார். ஆகவேஇவருக்குஎதிராக நடவடிக்கை எடுங்கள்'' என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் ஹேஷா விதானகே, ''கோப் குழுவின்தலைவரது செயற்பாடுகள் தொடர்பில் நாங்கள் தொடக்கத்தில் இருந்தே குறிப்பிடுகிறோம். கிரிக்கெட் விவகாரம் தொடர்பில் கோப் குழுவில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தலைமையில் முன்னெடுப்பதை நிறுத்தி மாற்று தீர்மானங்களை முன்னெடுங்கள் என்பதை வலியுறுத்துகிறேன்'' என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர, ''கோப் குழுவின் தலைவர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை.ஆகவேகிரிக்கெட் தொடர்பான விசாரணைகளை கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தலைமையில் முன்னெடுக்கப்படுமாயின் கோப் குழுவில் நாங்கள் பங்குப்பற்ற போவதில்லை. எனவே உரிய தீர்மானத்தை எடுங்கள்'' என்று சபாநாயகருக்கு அறிவித்தார்.

அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷமன் கிரியெல்ல, ''இவ்வாறான பிரச்சினைகள் வரும் என்பதால்தான் கோப் மற்றும் கோபா உள்ளிட்ட முக்கிய குழுக்களின் தலைமைப் பதிவியை எதிர்க்கட்சிகளுக்கு வழங்குங்கள் என்று வலியுறுத்தினேன். மக்கள் போராட்டத்துக்கு பயந்து நீங்கள் (சபாநாயகரை நோக்கி) அப்போது அதற்கு இணக்கம் தெரிவித்தீர்கள். போராட்டம் முடிவடைந்ததன் பின்னர் வழுங்கிய வாக்குறுதியை மறந்து விட்டீர்கள். இதுவே உண்மை'' என்றார்.

இதையடுத்து கோப் குழு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உரிய தீர்மானத்தை அறிவிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

## கோப் குழுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட, எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு அரசநிதிக்குழுவில் கருத்துதெரிவிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அந்தக் குழுவில் அதன் தலைவரான பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் மகன் மட்டும் எப்படிக் கலந்துகொள்ள மு-டிகின்றது?

நான் அரச நிதிக் குழுவில் கலந்துகொள்ள முடியுமா முடியாதா என வாக்கெடுப்பு நடத்தி, குழுவுக்கு வரமுடியும் ஆனால் பேசமுடியாது என எனது வாயை மூடினார்கள். ஆனால் கிரிக்கெட் சம்பந்தமான கோப் குழுவில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார அமர்ந்துள்ளார். எந்த அடிப்படையில் அவர் கோப்குழுவில் அமர முடியும்? அதற்கு அனுமதி வழங்கியது யார்? எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லாத உரிமை கோப்குழுவின் தலைவரின் மகனுக்கு எவ்வாறு கிடைத்தது?

இங்கு பெருமளவில் சட்டம் மீறப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரான எனக்கு இல்லாத உரிமை எவ்வாறு கோப்குழுவின் தலைவரின் மகனுக்கு கிடைத்தது? எனவே கோப்குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் தரவுகளுக்கு அமைய அவருக்கு தொடர்ந்தும் கோப்குழுவின் தலைவராக இருப்பதற்கு தார்மீக உரிமை இல்லை. அத்துடன் இது தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர், சபாநாயகர் பதிலளிக்க வேண்டும் - என்றார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, "வெளியாள் ஒருவருக்கு கோப் குழுவின் அமர உரிமை இல்லை. ஆனால் தனது மகனே தனது ஊடகச் செயலாளர் என்றுரஞ்சித்பண்டாரகூறியுள்ளார், இருப்பினும் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பதில் வழங்குகிறேன்'' - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்த ஆண்டு மக்கள் போராட்டம் மாபெரும் புரட்சியாக வெடிக்கும்

## எச்சரிக்கிறார் சம்பிக்க



அரச வருமான இலக்கை தொகையில் மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி வருமானத்தை திரட்டிக்கொள்ளும் யோசனைகளைக் குறிப்பிடவில்லை.

வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. ஆகவே இந்த யோசனையை செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும்.

ஆகவே, மக்கள் போராட்டத்தைத் தடுக்க ஆட்சியாளர்களும், ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் யதார்த்தபூர்வமற்றது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் பல முன்மொழிவுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச வருமான இலக்கு 3130 பில்லியன் ரூபாவாகக் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 2500 பில்லியன் ரூபா வருமானம் திரட்டப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையவில்லை. இவ்வாறான நிலையில் 2024 ஆம் ஆண்டு 3820 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. 2022 ஆம் ஆண்டு 8.5 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியை 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15.5 சதவீதமாக அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இது முற்றிலும் சாத்தியமற்றது. இந்த யோசனைகளை செயற்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெறும்.

2023 ஆம் ஆண்டு பெறுமதி சேர் வரி ஊடாக 908 பில்லியன் ரூபா வரி வருமானம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிறைவடைந்த 09 மாதகாலப்பகுதிக்குள் 680 பில்லியன் ரூபா வருமானமே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வரி வருமானத்தைப் பெறுவதற்காக ஒட்டுமொத்த மக்களின் உழைப்பு மற்றும் சேமிப்பு சூறையாடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு எரிபொருளுக்கும் 10 சதவீத பெறுமதி சேர் வரி அறவிடப்படும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இந்த ஆண்டு 88 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. ஒரு லீற்றர் டீசலில் இருந்து 80 ரூபா வரியும், ஒரு லீற்றர் பெற்றோலில் இருந்து 120 ரூபா வரியும் அரசுக்கு செலுத்தப்படுகிறது. ஆகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டமடைகிறது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மின்சார சபை கடந்த எட்டுமாத காலப்பகுதியில் 20 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களில் மாத்திரம் மின்சார சபை 20 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் மின்சார கட்டண அதிகரிப்பால் தொழிற்றுறையல்ல மக்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் மக்கள் தமது சொத்துக்களையும், தங்க ஆபரணங்களையும் விற்று வாழ்கிறார்கள். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள், அரச வருமானம் எதிர்பார்ப்பு மற்றும் வரி விதிப்பு ஆகிய தீர்மானங்களால் அடுத்த ஆண்டு மக்கள் போராட்டம் மீண்டும் தலைத்தூக்கும்.


முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அது அவரது இறுதி வரவு - செலவுத் திட்டம் என்பதை அவரிடம் குறிப்பிட்டேன். அதே போல் தோற்றம் பெறவுள்ள மக்கள் போராட்டத்தை அரசாங்கத்தால் தடுக்க முடியாது என பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த சரத் வீரசேகரவிடம் குறிப்பிட்டேன். எனது கருத்து உண்மையாகியுள்ளது.

அரச வருமான இலக்கைத் தொகையில் மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி, வருமானத்தைத் திரட்டிக்கொள்ளும் யோசனைகளைக் குறிப்பிடவில்லை. வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது.

ஆகவே, இந்த யோசனையை செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும்.ஆகவே மக்கள் போராட்டத்தைத் தடுக்க ஆட்சியாளர்களும் ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும். - என்றார். (05)

# கந்தசஷ்டி 3 ஆம் நாள்

## திருவருள் சுரந்து காத்திடு முருகா!



பெற்ற வரத்தை பேணிடா நின்று
குற்ற மிழைத்தார் கொடிய அசுரர்
அசுரர் மாற அவதாரம் செய்தாய்
ஆறு முகவா அடிதொழு கின்றோம்

மாறா சூரர் மாறிட வைத்தாய்
சேவலாய் மயிலாய் உன்வச மாக்கினாய்
அருளைக் கொடுத்தாய் ஆணவம் போக்கினாய்
அரனின் மைந்தா அழகுடைக் குமரா

வேலை ஏந்தினாய் வெற்றியைக் காட்டினாய்
மூலப் பொருளாய் ஆகியும் நின்றாய்
வேதம்விளக்கினாய் விண்ணவர்க்குதவினாய்
பாதம் பணிகிறோம் பார்த்திடு முருகையா

ஓடி யோடி உன்னடி தொழுகிறோம்
பாடிப் பாடி பரவச மடைகிறோம்
தேடித் தேடி உன்னிடம் வருகிறோம்
திருவருள் சுரந்து காத்திடு முருகா

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அதிகரிப்பு போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் உயர்வு வழங்கவேண்டும்

## வே. இராதாகிருஷ்ணன் கோரிக்கை



தோட்டத்துறை மக்கள் இந்த நாட்டில் இரண்டாம் தர பிரஜைகள் அல்ல. அதனால் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் மலையகத்தில் வீடுகளை நிர்மாணிக்கத் தனி செயலணி அமைத்து செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில் -

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டிருக்கும் வரிகளை வருமானம் குறைந்த பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

பெருந்தோட்ட மக்களின் நாளாந்த வருமானம் ஆயிரம் ரூபாவாகும். இதன் பிரகாரம் ஒரு தொழிலாளி மாதத்துக்கு 20 ஆயிரம் ரூபாவே பெறமுடியுமாக இருக்கிறது.

பெருந்தோத்துறையில் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு மாதச்செலவுக்கு 83 ஆயிரத்தி 333 ரூபா தேவை என்பதை வல்லுநர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆனால், கடந்த 3 வருடங்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனம் அதிகரிக்கப்படவில்லை. ஆனால், வாழ்க்கைச்செலவு 3 மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் தோட்டத்தொழிலாளர்களில் 70 வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். தோட்டத்துறை மக்கள் இந்த நாட்டில் இரண்டாம் தர பிரஜைகள் அல்லர்.

அதனால் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக் கப்பட்டிருக்கும் 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச்செலவு தோட்டத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் ஒரு தொழிலாளிக்கு நாளாந்தம் வழங்கப்படும் கூலியுடன் வாழ்க் கைச்செலவாக 500 ரூபா அதிகரித்து வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் தோட்டங்களில் காணப்படும் 4 ஆயிரம் ஏக்கர் தரிசு காணிகளைத் தோட்டங்களில் இருக்கும் இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறிக்கொள்கிறோம்.

சிறுதோட்ட உற்பத்தியாளர்கள் அவர்களின் உற்பத்தியை வர்ச்சியடைச்செய்ய அவர்களுக்கு அந்தக்காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்படவேண்டும்.

மேலும் பெருந்தோட்டங்களில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்காக ஒரு லட்சத்தி 50 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன.

200 வருடங்கள் வரலாற்றைக்கொண்ட தோட்ட மக்கள் இன்னும் லயன் அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அதனால் தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அந்தக் காணிகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆரம்பமாக பெருந்தோட்ட மக்களைக் காணி உரிமை உள்ளவர்களாக மாற்றவேண்டும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 இல் இந்திய அரசாங்கத்தின் உதவியால் வடக்கு, கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளும் மலையகத்தில் 4 ஆயிரம் வீடுகளும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் 50 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் மலையகத்துக்கான 4 ஆயிரம் வீடுகள் இதுவரை பூர்த்திசெய்யப்படாமல் இருக்கின்றன. அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி இங்கு வந்தபோது மேலும் 10 ஆயிரம் வீடுகள் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அதே 10 ஆயிரம் வீடுகளை வழங்குவதாகவே தெரிவித்திருக்கிறார்.

4 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு சுமார் 13 வருடங்கள் சென்றிருக்கின்றன. அப்படியாயின் ஒரு வருடத்துக்கு 150 வீடுகளே கட்டி இருக்கிறோம். அதனால் இந்த வேகத்தில் சென்றால், இந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு இன்னும் 100 வருடங்கள் செல்லும். அதனால் இந்த வீடுகளை நிர்மாணிக்கத் தனி செயலணி அமைத்து செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும். -என்றார். (05)

# வனவிலங்கு அதிகாரிகளின் துப்பாக்கிசூட்டில் ஒருவர் சாவு

லுனுகம்வெஹர தேசிய வனப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வனப்பகுதியில் வனவிலங்கு அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# தங்க நகைகளை திருடியவர் திஸ்ஸமகராமவில் கைது

## அவற்றின் பெறுமதி 19 லட்சம் ரூபாவாம்



திஸ்ஸமகராம பிரதேசத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி 19 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் திஸ்ஸமகராம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவராவார்.

இவர் ஹலம்பகஸ்வல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் திஸ்ஸமகராம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து சில தங்க நகைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமகராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இதிலும் பின்வாங்குவாரா ரணில் விக்கிரமசிங்க

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்குபல்கலைக்கழகங்களைஉருவாக்கும் அனுமதி வழங்கப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிடுவது பாரதூரமானது. 13ஆவதுதிருத்தத்தில்கல்விகட்டமைப்பு தொடர்பானவிடயத்தில்பல்கலைக்கழகங்கள்தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்அதிகாரங்களைமாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் கிழக்கு மாகாணத்தில் வாஹுப் கொள்கையுடைய ஷரியா பல்கலைக்கழகம் கிழக்கு மாகாணத்திலும், மூளைச்சலவை செய்யும் பல்கலைக்கழகம் வடக்கு மாகாணத்திலும் தொடங்கப்படும்.

அரசியல்வாதிகள், மாகாண ஆளுநர்கள் தமக்கு ஏற்றாட் போல் பல்கலைக்கழகங்களை உருவாக்க முயற்சிப்பாளர்கள். ஆகவே மாகாணங்களுக்கு பல்கலைக்கழகஅனுமதிஎன்றயோசனைமுறையற்றது என்பதை வெளிப்படையாக குறிப்பிடுவோம்.

இவ்வாறுஎதிர்ப்புத்தெரிவித்திருக்கிறார்நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் முன்மொழியப்பட்டுள்ள 2024 வரவு செலவுத் திட்டத்தில் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மாகாண சபைகள் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்படும் என்றுதெரிவிக்கப்பட்டிருந்தமைக்குஎதிர்ப்புத்தெரிவித்து அவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவருமான அவர், அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்று வாதிட்டு எதிர்ப்புத் தெரிவித்துவரும் ஒருவர். எனவே அவர் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதை எதிர்ப்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஆனால், இதேபோன்றுஅவர் 13ஆவது திருத்தத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்த்தபோது அதனையொட்டி பிக்குகளும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, தான் முன்வைத்த காலை இலகுவாகப் பின்னகர்த்தியவர் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றேன் என்று ஆரவாரமாகத் தொடங்கி 2023 மாசி 4ஆம் நாளுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அதற்கொரு கால எல்லையும் கொடுத்து பரபரப்பைக் கிளப்பிய பின்னர் இந்த எதிர்ப்பைக் கண்டு பெட்டிப்பாம்பாக அடங்கிப்போனவர்ரணில்விக்கிரமசிங்க. அதன்பின்னர் மாகாண சபைகளைப் பலப்படுத்துவேன், அதற்காக இணைந்து செயற்படலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் குழுவினருக்கு நம்பிக்கைகொடுத்துவிட்டு, இப்போது அந்த நம்பிக்கையையும் உடைத்தெறிந்திருப்பவர் அவர்.

சரத் வீரசேகரவின் இந்த எதிர்ப்பை நாடாளுமன்றத்திற்குள்ளும்வெளியிலும்இருக்கக்கூடிய பேரினவாதிகள்தொடர்வர்என்பதில்மாற்றுக்கருத்தில்லை. அந்த எதிர்ப்புக்களைப் பார்த்து பல்கலைக்கழக விடயத்திலும்ரணில்பின்வாங்கிவிடுவாரா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. 2024 வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்து விட்டதற்காக மாகாண சபைகளால் பல்கலைக்கழங்கள் உடனடியாக உருவாக்குவதற்கு வாய்ப்புக்கிடைத்துவிடும்என்று அர்த்தமல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளே இல்லாத நிலையில் இது பற்றி அங்கு சிந்திக்கக்கூட ஆட்கள் இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் இந்த பல்கலைக்கழக அதிகாரத்தை ரணில் கைவிட்டாலும் அது வெளியே தெரியப்போவதில்லை.

இருந்தாலும்தமிழர்கள்விடயத்தில், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பேரினவாதிகளின் எதிர்ப்புக்களைக் கண்டுஅஞ்சி, நடுங்கி, ஒடுங்கிவிடும்ரணில்விக்கிரமசிங்க இப்போது இந்த எதிர்ப்பைக்கண்டு, பல்கலைக்கழக அதிகாரத்தையும் கைவிட்டுவிடுவாரா என்பதே கேள்வி.

# இனப்போரும் இழப்பீடும்

என். சத்தியமூர்த்தி



கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பொருளாதாரப் பிரச்சினைக்கு அப்போது ஆட்சியில் இருந்த ராஜபக்சக்களும், அவர்களுடனிருந்து செயல்பட்ட அதிகார வர்கத்தினருமே காரணம் என்று உச்ச நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. இதுபோன்றே, கடந்த வருடத்தில், 2019 உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலுக்கும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் அவருடன் சேர்ந்தவர்களுமே பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

என்ன, அந்த வழக்கில், சிறிசேனா தரப்பினர் பெரும் தொகையை, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாகக் கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், தற்போதைய வழக்கில், ராஜபக்சாக்கள், மனுதாரர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு காசு மட்டும் கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. காரணம், இந்த வழக்கில், மனுதாரர்கள் இழப்பீடு எதுவும் கேட்கவில்லை என்பதை நீதியரசர்கள்



சுட்டிக்காட்டி உள்ளனர். அதாவது, இந்த வழக்கிலும், முந்தையதைப் போல, மனுதாரர்கள் இழப்பீடு கோரி யிருந்தால், அதனை நீதிமன் றம் பரிசீலனையில் எடுத்து, அவர்களுக்கு ஆதரவாக உத்தரவிட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில், ராஜபக்சக்களும் மனுதாரர்களுக்கு, இலட்சக் கணக்கில்அல்லதுகோடிகணக்கில் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கலாம்.

### இழப்பீடு மனுக்கள்

இதில் குயுக்தியான கேள்வி ஒன்று உள்ளது. இனியும், தற்போதைய மனுதாரர்களோ, அல்லது புதிய மனுதாரர்களோ, நீதிமன்றத்தின் உத்தரவை மேற்கோள் காட்டி, புதிதாக இழப்பீடு கோரினால், நீதியரசர்கள் என்ன கூறுவார்கள்? தற்போது, நீதியரசர்களில் ஒருவர் மட்டும், ராஜபக்சக்களுக்கு எதிரான மனுக்கள், காலம் தாழ்ந்து சமர்ப்பிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, அவை ஏற்கத் தகுந்தவை அல்ல என்று தீர்ப்பளித்துள்ளார்.

ஆனால், தலைமை நீதிபதி, ஜயந்த ஜயசூர்யா வழங்கிய மெஜாரிட்டி தீர்ப்பு அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ரணிலின் 2024-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசு கட்சி உறுப்பினரன சுமந்திரன் இதனைத் தான் கூறினார். ஜனாதிபதி சட்டதரணியான சுமந்திரன் கூறியபடி, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மேற்கோள்காட்டி, நாட்டின் 2.2 கோடி மக்களும்

தொகையில், சிங்கள- பௌத்தர்கள் மட்டுமல்ல, தமிழர்களும் அடங்குவர். அது போலவே, மலையகத் தமிழர்களும் முஸ்லீம் மக்களும் அடங்குவர். ஏன், இப்போது சிலிர்த்துக் கொண்டு எழுந்துள்ள கொழும்பு பேராயர், மால்கம் கார்டினல் ரஞ்சித் ஆண்டகையின் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொண்டுள்ள தென்னிலங்கை கத்தோலிக்க கிறிஸ்தவர்களும்கூட அடங்குவர்.

அவர்கள் எல்லோரும் தனியாகவோ, ஒருங்கிணைந்தோ பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ராஜபக்சா வகையாறாக்கள் தங்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தை அணுகலாம். நாட்டின் மக்கள் தொகையில் 25-30 சதவீதம் வரை அடங்கும் இந்த தரப்பினரின் மனுக்களே சர்வதேச அளவில் பேசப்படும்.

அதிலும் குறிப்பாக, இந்த இனங்களைச் சேர்ந்த ஒவ்வொரு தனி மனிதனும், அல்லது குடும்ப தலைவரும், தனிப்பட்ட மனுக்களை அளித்தால், அவற்றை சேமித்து வைக்க உச்ச நீதிமன்ற வளாகத்தில் இடம் இருக்காது! அதுவே, கணினி மூலம் சமர்ப் பிக்கப்படும் மனுக்களாக இருந்தால், அதன் காரணமாகவே, உச்ச நீதிமன்றத்தில் தற்போதுள்ள பெரும் கணினிகள் செயலிழந்துவிடும் வாய்ப்பு உள்ளது.

### உள்நாட்டிலே தீர்வு

இது இவ்வாறென்றால், உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய மனநிலையைக் கருத்தில்கொண்டு, இனப்போர் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கான தீர்வையும், தமிழர் தரப்பும் ஏன் உள் நாட்டிலேயே ராஜபக்சக்களிடம் இருந்து இழப்பீடுகோரி மனுக்களை அளித்தால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருக்க முடியும்?

தென்னிலங்கை மக்கள் என்னவேனும் செய்துவிட்டு போகட்டும். ஆனால், பாதிக்கப்பட்ட பிற இனத்தவர், தனித்தோ, பெரும் குழுவாகவோ இதனை முன்னெடுக்கலாம். ராஜக்சக்களிடமிருந்து இழப்பீடு கேட்டு உச்ச நீதிமன்றத்தை அணுகலாம். அதற்கு சுமந்திரன் போன்ற சட்டதரணிகள் தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்ளலாம். நாட்டின் மக்கள் பெற்றுக்கொள்ள முயலக்கூடாது? போர் குற்றங்கள் ஆகட்டும், பொறுப்பு கூறல் ஆகட்டும், தற்போது உச்ச நீதிமன்றம் அது குறித்து என்ன கூற போகிறது என்று தமிழ் மக்கள் அறிந்து கொள்ள முயல வேண்டும்.

அதைவிட முக்கியம், காணாமல் போனோருக்கான இழப்பீடு மற்றும் போர் காலத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மறுவாழ்வு குறித்த விடயங்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் மனு அளிக்கலாம். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்வைத்தாவது நிதி அமைச்சர் என்ற போர்வையில், 2024 ஆண்டுக்கான பட்ஜெட்டில் இந்த விடயத்திற்கு எல்லாம் ரணில் நிதி ஒதுக்கி உள்ளார். அதனை எதிர்த்துபோராடுவது, யதார்த்தமற்றது, நடைமுறைக்கு ஒவ்வாதது. என்ன, நாடாளுமன்றத்தில் சுமந்திரன் சுட்டிகாட்டியது போல், இது விடயங்களில் இனப்போர் முடிந்த இத்தனை ஆண்டு கால பட்ஜெட்டுகளில் அனுமதிக்கப்பட்ட நிதி என்னவாயிற்று என்ற கேள்வியும் எழுகிறது. அதற்கான விடையைகக்கூட உச்சநீதிமன்றத்தின் வாயிலாகப் பெற முயலலாம்.

### இரட்டை நிலைபாடு

தமிழர் தரப்பை கேட்டால், நாட்டின் நீதித் துறைகூட பேரினவாதிகளுக்கு துணை போகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைப்பார்கள். அதாவது, நீதி துறையின் சமகாலத்திய சுதந்திரமான மக்கள்சார்ந்த முடிவுகள் எல்லாம், சிங்கள-பௌத்த சமுதாயத்தினரை மட்டுமே முன்வைத்து எடுக்கப்படுகின்றன. அதுவே, இனப்பிரச்சினை போன்ற, இரு சமூகம் சார்ந்த வழக்கு என்றால், விடயம் விபரீதமாகவே இருக்கும் என்பது அவர்கள் வாதம். மக்கள் விடயங்களில், நீதிதுறை இரட்டை நிலைபாடை எடுக்குமா, என்பதே கேள்வி.

இதுவே தமிழர் தரப்பு மற்றும் அரசு சார்ந்த வழக்குகளுக்கும் பொருந்தும். அந்த வகையிலேயே, மலையக தமிழர் மற்றும் முஸ்லீம் மக்களின் வழக்குகளும் கையாளப்படும். ரஞ்சித் ஆண்டகையை கேட்டால், அது சிங்கள கத்தோலிக்கர்களுக்கும் பொருந்தும் என்பார். அல்லது, அதுவே அவரை குறித்த எதிர்பார்ப்பாக இருக்கும்.

என்றாலும், இனப்போர் முடிந்த பின்னர், தமிழர் தரப்பிற்கு சமஷ்டி சார்ந்த கூட்டாட்சி முறைமைக்கு ஆதரவாக பேசுவதற்கும், ஆதரவு திரட்டுவதற்கும் உரிமை உள்ளது என்றும் இதே உச்ச நீதிமன்றம்தான் தீர்ப்பு வழங்கியது. அதற்கு, நாட்டின் தற்போதைய ஒற்றையாட்சி முறையும் அது சார்ந்த அரசியல் யாப்பும் தடையில்லை என்பதையும் உச்சநீதிமன்றமே உறுதி செய்தது.

### புவிசார் அரசியல்

தற்போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் (6ஆம் பக்கம் பார்க்க..)

# கட்டுப்பாட்டு விலையையும் மீறி சீனி விற்ற 350 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

## 22 ஆயிரம் சுற்றிவளைப்புகள்

இந்த வருடத்தின் முடிவடைந்த முதல் 10 மாதங்களுக்குள் கட்டுப்பாட்டு விலையை மீறி சீனியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 350 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் 22 ஆயிரம் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாகப்பதுக்கிவைக்கப்பட்டுள்ள சீனி தொகை கைப்பற்றப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு விநியோகிக்கப் படவுள்ளதாகவும் நுகர்வோர் சட்டத்தின் கீழ் இதற்கான அதிகாரம் அதிகார சபைக்கு இருப்பதாகவும் நுகர்வோர் விவகார சபையின் சுற்றிவளைப்பு மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

முன்னதாக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான 25 சத வரியை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்ததையடுத்து சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விலை அதிகரிப்பைத் தடுக்கும் நடவடிக்கையாக விசேட வர்த்தமானியின் மூலம் சீனிக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

அதற்கமைய பொதி செய்யப்படாத ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாவாகவும் பொதி செய்யப்படாத சிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 330 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் சந்தையில் சீனிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் சட்டவிரோதமாக சீனியைப் பதுக்கி வைத்து கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ள நிலையில், நுகர்வோர் அதிகார சபையால் தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் நுகர்வோர் விவகார சபையின் சுற்றிவளைப்பு மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் அசேல பண்டார மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சட்டவிரோதமாக சீனி தொகை பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களைக் கண்டறிவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பேலியகொடையில் சீனி பதுக்கி வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையொன்றுக்கு சீல் வைக்கப்பட்டதுடன் அங்கிருந்து 270 மெற்றிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனிடையே கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சீனியை விற்பனை செய்த வர்த்தக நிலையமொன்றை நுகர்வோர் விவகார அதிகாரசபையினர் சுற்றிவளைத்ததுடன் அங்கிருந்து 5 மெற்றிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டது.

இந்தவருடத்தின் முதல் 10 மாதங்களுக்குள் 22 ஆயிரம் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது கட்டுப்பாட்டு விலையை மீறி சீனியை விற்பனை செய்த 350 இற்கும் அதிகமான வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சீனி தொகை கைப்பற்றப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. நுகர்வோர் சட்டத்தின் கீழ் இதற்கான அதிகாரம் உள்ளது.

எவ்வாறாயினும் சீனியைக் கட்டுப்பாட்டு விலைக்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்படும் போது அதற்கான ரசித்தை பெற்றுக்கொண்டு 1977 எனும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்யுமாறு நாம் கோரிக்கை விடுக்கிறோம். – என்றார். (05)

# நாணய நிதியத்தின் 2 ஆம் கட்டக் கடன் தொகை வரவு – செலவு திட்டம் நிறைவேறியபின் கிட்டும்

## நம்புகிறார் பந்துல

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்ட கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின்னர் கடன் மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பது இலகுவாக அமையும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சுதந்திரத்துக்குப் பின்னர் உத்தியோகபூர்வமாக இலங்கை வங்குரோத்தடைந்த நாடு என்று அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வரவு மற்றும் செலவுக்கிடையிலான பற்றாக்குறை கடன் மூலமும், தேசிய சொத்துக்களை விற்பதன் ஊடாகவும், பணத்தை அச்சிடுவதன் ஊடாகவும் முகாமை செய்யப்பட்டது.

ஆனால், இம்முறை எமக்கு அந்த மூன்று வழிகளையுமே அனுக முடியாது.

எனவே அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்று வழி இல்லை. வருமானத்தை அதிகரிப்பதற்கு வரிகளை அதிகரிக்க வேண்டும். எனவே, குறுகிய காலத்துக்கேனும் வரிசுமைகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எவ்வாறிருப்பினும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டம் முற்போக்கானதாகும். எனவே, அதனை நிறைவேற்றியவுடன் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்டக் கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும். நாணய நிதியத்திடமிருந்து கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே, இடைநிறுத்தப்பட்டுள்ள கடன்கள் மீளக் கிடைக்கப்பெறும். அதன் மூலம் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். அபிவிருத்திகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் போது இலங்கை வங்குரோத்து நிலைமையிலிருந்து முழுமையாக மீளும். அதன் பின்னர் ஸ்திரமான பொருளாதாரப்பாதையில் எம்மால் பயணிக்க முடியும். – என்றார்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vagetable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vagetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அவசர மருந்து உபகரண கொள்வனவுக்கு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்

## விஜேதாஸ ராஜபக்ச கூறுகிறார்



சுகாதாரத் துறைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு பொறிமுறையொன்றை நாடாளுமன்றத்துடன் இணைந்ததாக முன்னெடுப்பது அவசியமாகும் என நிதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவசர மருந்து கொள்வனவை நிறுத்தியுள்ள நிலையில் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் நெருக்கடிகள் தொடர்பில் சபையின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா அரசாங்க நிதி குழுவின் தலைவர் என்ற வகையில் முன்வைத்துள்ள அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதுதொடர்பில் கவனம் செலுத்தப்படாவிட்டால் மீண்டும் நாடாளுமன்றம் இரண்டாகப் பிளவு படும். விவாதங்கள் நடத்தப்பட்டு அந்த மருந்தால் இவ்வளவு பேர் மரணமடைந்தனர். இந்த மருந்தால் இந்தளவு மரணம் ஏற்பட்டுள்ளது என்ற விவாதமே தொடரும்.

மருந்துகளுக்கான பெறுகைக் கோரலை சாதாரண முறைப்படி மேற்கொள்வது தவறானது. அதனை நிவர்த்தி செய்யும் வகையிலேயே முன்னாள் சுகாதார அமைச்சர் அவசர மருந்து கொள்வனவு முறையை அறிமுகப்படுத்தினார்.

எனினும் இந்த அவசர மருந்துக் கொள்வனவு மூலம் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதால் தற்போதைய சுகாதார அமைச்சர் அந்த முறையை இடை நிறுத்தியுள்ளார்.

அவராலும் கட்டுப்படுத்த முடியாத மாபியா இடம்பெறுவதால்தான் அவர் அந்த முறைமையை நிறுத்தினார் என நான் நினைக்கின்றேன்.

இந்த வகையில் எட்டு மாதம் அல்லது பத்து மாத காலம் தாழ்த்தி பெறுகைக்கோரலை மேற்கொண்டு மருந்துகளைக் கொள்வனவு செய்ய முற்பட்டால் நோயாளர்கள் மரணம் அடைவதைத் தடுக்க முடியாது.

அதனால் நோயாளர்களுக்கு சிகிச்சைக்காகக் குறுகிய காலத்தில் மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எதிர்கொள்ள நேரும் குற்றச்சாட்டுகளுக்கு பயந்து அமைச்சரால் கூட இது தொடர்பான தனியான தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது. அதனால் நாடாளுமன்றத்தோடு இணைந்ததாக பொறிமுறையொன்றை உருவாக்குவது அவசியமாகும்.

அந்தப் பொறிமுறையை நிதி தெரிவுக்குழு போன்ற நிறுவனத்தை அடிப்படையாக வைத்து உருவாக்க முடியும். அதற்கான பொறிமுறையை தயாரிப்பதற்காகத் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- என்றார். (05)

## Öª©¼ÃVòD Öw©¬|D....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போர்க் குற்றங்கள், பொறுப்புகூறல் விடயங்களில் சர்வதேசம் தங்களுக்கு நல்லதொரு முடிவைப் பெற்றுத்தரும் என்று தமிழர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அல்லது, இதுவரை நம்பி வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கே மேலை நாடுகளின் மீதான நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள், ஜெனிவாவில், ஐ.நா, மனித உரிமை அமைப்பில் முன்னெடுத்துள்ள செயல் திட்டங்கள் எல்லாம், இலங்கை அரசிற்கு எதிரானவை என்பது உண்மை. ஆனால், அது இனப்பிரச்சினை சார்ந்ததல்ல சீனாவை மையமாக்கிய புவிசார் அரசியலின் ஒரு பாகம் மட்டுமே.

சீனா விடயத்தில் இலங்கை அரசு தங்கள் சார்பில் செயலாற்றினால், அவர்கள் இனப்பிரச்சினையைக் கண்டுகொள்ள மாட்டார்கள். இலங்கை அரசைப் பொறுத்தவரையில், மேலை நாடுகள் தங்களை நெருக்கும்வரை அவர்கள் சீனாவின் ஆதரவை தொடர்ந்து பெறுவதற்கான விலையைக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள்.

அது சீனாவால் பாழ்பட்ட நாட்டின் பொருளாதாரம் குறித்தது மட்டுமல்ல. மாறாக, ஐ.நா. மனித உரிமை அமைப்பு, அதற்கும் அப்பால், ஐ.நா. பாதுகாப்பு சபை குறித்த விடயமமுமாகும். பாதுகாப்புச் சபையில், பிற உறுப்பினர்களின் முடிவுக்கெதிரான தடுப்பதிகார (வீட்டோ) வாக்கை சீனாவும் ரஷ்யாவும் பெற்றிருப்பதே இதற்கான காரணம்.

இந்தப் பின்னணியில், இனப்பிரச்சினை விடயங்களில், ஒரே மனுவாகவோ பல்வேறு பிரச்சினைகள் குறித்த தனி மனுக்களாகவோ தமிழர் தரப்பு உச்ச நீதிமன்றத்தை அணுகலாம். அதுவே, பொறுப்புக் கூறல் விடயத்தை ஆராய உள் நாட்டுப் பொறிமுறையை மட்டுமே ஆதரிக்க முடியும் என்ற அரச தரப்பு வாதத்திற்கு வைக்கப்படும் பரிட்சை.

இத்தகைய வழக்குகளின் மூலம் இனப்பிரச்சினை குறித்த உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு மற்றும் நீதியரசர்களின் மனநிலை குறித்து தமிழர்களுக்கு ஒரு தெளிவு பிறக்கும். அப்போது, நாட்டின் நீதி துறையின் மீது தமிழர் தரப்பிற்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்றால், இருக்கவேஇருக்கிறது சர்வதேசமும் மனித உரிமை அமைப்பும்.

என்னவென்றாலும், ஐ.நா. பொறிமுறைகளையும் அவற்றின் காலம் தாழந்த நடவடிக்கைகளையும் வைத்து நோக்கும் போது, சரியோ-தவறோ, நாட்டின் நீதித் துறை வேகமாக செயல்படுகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் வயது மூப்பு அடைந்து இந்த மண்ணைவிட்டுப் போவதற்கு முன்னர், ஆதரவாகவோ, எதிராகவோ ஒரு தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கையாவது உள்ளது.

இதற்காகவாது, தமிழர் தரப்பு நாட்டின் நீதி துறையின் கதவுகளை தட்ட தயங்க கூடாது!



## மேலும் 100...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்குப் பதில் அளித்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

''அமெரிக்க டொலரின் அதிகரிப்போடுநாட்டில்அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் மூன்று மடங்கிலிருந்து ஆறு மடங்கு வரை அதிகரித்தன. சில மருந்துகளின் விலை 600 ரூபாவால் அதிகரித்துள்ளது. இப்போது மருந்துகளின் விலை அதிகரிப்பையாவது கட்டுப்படுத்த முடியாதா? அதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சர் மேற்கொள்ள முடியாதா?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்தசமரவீர கேள்விஎழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தாவது;

தற்போதும் நாட்டில் விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ள 100 மருந்து வகைகள் காணப்படுகின்றன. சந்தையில் காணப்படும் அன்டி பயடிக், அன்டீ ஹைபடென்ஸ், கார்டியோ லோஜிகள்ஸ் உள்ளிட்ட 50 வகை மருந்துகளும் அதற்குள் உள்ளடங்குகின்றன. அவை அனைத்தும் பிரதான மருந்து வகைகள் பட்டியலைச் சேர்ந்தவை.

அவைகளுக்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார சபையாகும். அதற்கே விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் உள்ளது.

எதிர்காலத்தில் அத்தியாவசியமான மேலும் 100 மருந்துகளுக்காகவாவது விலைக் கட்டுப்பாட்டை கொண்டு வருவதே எமது எதிர்பார்ப்பு. அதற்காக மேற்படி விலைகள் தொடர்பான குழு சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளன.

அதற்கான தலைவரும் அண்மையிலேயே நியமிக்கப் பட்டுள்ளார். அந்த தலைவருடன் கலந்துரையாடிஅந்தநடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அவ்வாறு 100 மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டு ஏற்படுத்தி அதனை வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரே மருந்து வெவ்வேறான 10 வர்த்தக பெயர்களில் காணப் படுகின்றன. அது தொடர்பில் குறித்த அதிகார சபைக்கு ஒரு முறைமை காணப்படுகிறது. சாதாரண விலை முறைமையை ஒழுங்குபடுத்தி விலைக் குழுவில் காணப்படும் நிபுணர்கள், மருந்துகள் தொடர்பான நிபுணர்கள், பொருளாதாரத் துறை நிபுணர்கள் அனைவரதும் கண்காணிப்பில் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

## நாட்டில் 15 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையுடன் இணைந்து மாவட்ட தொற்றா நோய் தடுப்பு பிரிவினர் மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் நடத்திய குருதிப் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட தொற்று நோய் தடுப்பு அதிகாரி வைத்தியர் இ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற பரிசோதனை முகாமில் வைத்தியர் ஜி.குணன் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலங்கை மக்களின் 15 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருமில்லியன் பேரை எடுத்துக் கொண்டால் அதில் அரைவாசி பேர் தங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என்பதை பரிசோதனை மூலம் அறிந்து கொள்கிறார்கள். ஏனைய அரைவாசி பேரில் பலரும் பரிசோதனை எதுவுமின்றி நோயினை கண்டுபிடிக்காமல் வாழ்கிறார்கள். ஆகவே, தங்களுடைய உடம்பில் நீரழிவு நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். அதற்காகவே இப்போது நாம் இந்த இடத்தில் இரத்த பரிசோதனை முகாமை நடத்தி வருகிறோம்.

நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கு பல்வேறு விதமான நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும். அதில் மிகப் பிரதானமானது மனதை சமச்சீராக வைத்துக்கொள்வது. மன அழுத்தத்திலிருந்து தம்மைப் பாதுகாத்து மிகவும் சமச்சீரான நிலையில் மனதை வைத்துக் கொள்கின்ற போதும் உடற்பயிற்சி செய்கின்றபோதும் சிறந்த உணவுப் பழக்கங்களை கையாளுகின்ற போதும் நிச்சயமாக நீரழிவு நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார்.

## உயிருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமநிலை தவறி, அவரது கழுத்தில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்தவர் புத்தளத்தைச் சேர்ந்த கிரிஷான்டன் மோசஸ் (வயது 33) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விளக்கமறியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி (வயது-58), அவரது மகளான சின்னராஜா சுதர்சினி (வயது-42) மகனான சின்ன ராஜா சுதாகரன் (வயது-39) ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 1990 ஆம் ஆண்டு இவர்கள் இங்கிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

அங்கிருந்து எந்தவித அனுமதியும் இன்றி படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கி இருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் ஒக்டோபர் 10 கைது செய்யப்பட்டனர்.

## வடக்கில் 7....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் கீழ் மனைப் பொருளியல் மற்றும் ஆடை வடிவமைப்பு கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழை வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் வருடாந்தம் 7000க்கும் அதிகமான மாணவர்கள் உயர்தரப் பரீட்சையுடன் தமது கல்வியை இடைநிறுத்துகின்றனர். அவ்வாறு கல்வியை இடைநிறுத்தாது, தேசிய தொழில்தகைமைசான்றிதழ் ஊடாக மாணவர்கள் தமது பல்கலைக்கழகக் கனவை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

தேசிய தொழில் தகைமை சான்றிதழ் கற்கை நெறியைத் தொடர ரூபாய் 25000 வழங்கப்படும். இது குறித்த வடமாகாண பிரதம செயலகத்தின் இணையத்தளத்தினூடாக மேலதிக தரவுகளை பெற்று கொள்ளலாம்.

தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் கற்கையை அதன் நான்காம் தரத்துடன் (NVQ level - 4) நிறுத்திவிடாது அதன் ஏழாம் தரம் (NVQ level - 7) வரை செல்வதுடன் ஊடாக ஒவ்வொருவரும் பட்டம் ஒன்றைப் பெற்றுகொள்ளலாம் .

அவ்வாறு தேசிய தொழில் தகைமையின் 7 ஆம் தரத்தினை பெற்றால் நீங்கள் அரச சேவையில் உயர் பதவிகளையும் வகிக்கலாம்.

பல்கலைக்கழகங்களில் கற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கு கல்வித் தகைமை இருக்கின்றது. ஆனால் தொழில் தகைமை இருப்பதில்லை. தேசிய தொழில் தகைமைச்சான்றிதழ் கற்கையைப் பூர்த்தி செய்பவர்களுக்கு கல்வி சான்றிதழுடன் தொழில் தகைமையும் உள்ளது-எனத்தெரிவித்தார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir




# கந்த புராணக் கலாசாரம்

இந்தியாவில் வேதங்கள் தோன்றின. திருமுறைகள் தோன்றின. இலக்கியம் இலக்கணம் பலவித கலாசாரம் பண்பாடு என்று செல்லிப் பெருமை பட்டுக் கொண்டே போகலாம். இராமாயணம் மகாபாரதம் கந்தபுராணம் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் இவை யாவுமே இந்தியாவின் சொத்துக்கள் தான் அனால் இந்த வகையில் எந்தவொரு பெருமைக்கும் உரியதாக விளங்காவிடினம் கந்தபுராண கலாசாரம் என்பதை உருவாக்கி அதன் மூலம் வாழ்க்கை அமைத்த பெருமையினை ஈழத்தில் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் உரித்தாக்கி இருக்கின்றது.



இந்தியாவில் தோன்றியது தான் கந்தபுராணம். ஆனால் அதன் பெயரால் ஒரு கலாசாரம் யாழ் மண்ணில் உருப்பெற்றது என்பது ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா? புராணத்தின் பெயரால் ஒரு கலாசாரம் உருவாக முடியமா? அதுவும் கந்தபுராணம் என்னும் சமய நூல்களின் பெயரால் என்று எண்ணத்தோன்றுகின்றது அல்லவா 'புன்னெறி யதனிற் செல்லம் போக்கினை விலக்கி நன்னெறி காட்டும்: பாங்கினைக் கந்த புராணம் கொண்டு விளங்கியது. யாழ்மண்ணில் கோவில்கள் தோறும் கந்த பராணம் படிப்பதும் அதற்குப் பயன்(விளக்கம்) சொல்லுவதும் இடம்பெற்று வந்தது யாழ்ப்பாண மண்ணில் கலியின் சதியாலும் காலத்தின் கோலத்தாலும் கந்புராணம் படித்த சைவச்சூழல் குழம்பம் நிலை ஏற்பட்டது. அவ்வேளை ஆண்டவனது அனுக்கிரகத்தால் நல்லூரில் ஒரு குழந்தை பிறந்தது. அதன் உணர்வில் சைவமும் சைவ சித்தார்ந்தமும் இயற்கையிலே ஊறியே நின்றது. வளர்ந்த அந்தக் குழந்தை இளைஞ்ஞனாகத் தமிழ் நாடு சென்று ஆதீனத்தில் பிரசங்கம் செய்து சாவல் என்னும் விருதுடன் யாழ் வந்தது. நாவலர் விருது பெற்ற அந்த இளைஞன் 'நல்லை நகர் தந்த ஆறுமுக நாவலர் ' என்று போற்றுதற்கு உரியவர் ஆகின்றார். அவரால் சைவ சமயம் வளர்ந்தது ஒழுக்கம் உணர்த்தப்பட்டது. இலக்கியம் இதயங்களில் அமர்த்தப்பட்டது. இவரின் வருகையால் யாழ்ப்பாணத்தின் கலாசாரமே எழிர்ச்சி பெற்றது. இந்த கலாசாரத்தை இவரின் வழியில் வந்த பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கந்த புராண கலாசாரம் என்று பெருமைப்படுத்தினார்.

யாழ்ப்பாண கலாசாரம் இந்திய கலாசாரத்திலிருந்தும் தமிழ்நாட்டுக் கலாசாரத்திலிருந்தும் வேறான தனித்துவமான கலாசாரத்தில் மிளிர்கின்றது. எனலாம். கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தப்பெருமான் அவரே எங்கள் சொந்தப் பெருமான் என்று எண்ணும் அளவிற்கு யாழ் மண்ணும் அங்குவாழும் மக்களும் ஆகிவிட்டார்கள். என்பது மறக்க முடியாததாகும். நல்லூரை மையமாக வைத்த நாவலர் பெரமானின் பல பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கந்த புராணம் எங்கள் சொந்தம் என்று யாழ்மண்ணில் விதைத்த பெருமை நகவலரின் கலாசாரம் என்றே கூறலாம்.

திண்னைப்பள்ளிக்கூடங்களே யாழ் மண்ணில் அறிவுப் பொக்கிசங்களாகத் திகழ்ந்த காலத்தில் அங்கு கந்தபராணம் சொல்லிக்கொடுக்கப்பட்டது. கோவில்களில் கந்தசஸ்டி விரதம் அனுஸ்டிக்கப்பட்டது. முருகனின் விரதங்களை மக்கள் உருக்கமாக் கடைப்பிடித்து ஓதினார்கள் விரத்தால் மனம் மொழி மெய் சுத்தமானது. மேன்மை கொள் சைவ நீதி தளைத்து நின்றது.

யாழ்ப்பாணத்தில் அந்நியரால் ஏற்பட்ட உருக்கலைவை உருப்படியாக்கி சரியான பாதையைக்காட்டி ஒழுக்கத்தையம் பண்பாட்டையும் தமிழ் மொழியையம் தலை நிமிர்திடச் செய்தார். இவ்வாறக அவர் செய்த பணிக்கு இட்ட மகுடமே 'கந்தபுராண கலரசாரம்'; ஆகும். இக்கலாசாரம் ஈழத்திற்கு மட்டுமே சொந்தமானது யாழ் மண்ணிற்கு மட்டுமே உரித்தானது. ஆனால் இன்று இந்தக்கலாசாரத்தை அறியாது இதன் பெருமை உணராது இருக்கம் போது வேதனையாக இருக்கின்றது.

நாவலர் பெருமான் ஊன்றிய விதை யாழ் மண்ணில் இன்றும் முளைவிட்ட படியே தான் இருக்கின்றது. அதனால் தான் இன்றுவரை இங்கு நல்லதோர் சமூகம் வாழ்கின்றது. என்றும் எண்ண முடிகின்றது. ஆனாலும் சூறாவளியாக சுனாமியாக வந்த நிற்கும் தவிர்க்க முடியாத சில சக்திகளால் கந்தபராண கலாசாரம் சீர்குலைந்துவிடுமோ என்னும் ஏக்கமே தற்போது எழுந்து நிற்கின்றது.

ஒழுக்கம் கட்டுப்பாடு உயர் சிந்தனை பக்தி அறம் நேர்மை யாவும் தந்தது தான் கந்தபுராணக்கலாசாரம். அதனைக்காப்பது நம் கடமையாகும். சிந்திப்போம் செயற்படுவோம் நல்லூர்க்கந்தனுக்கு கொடியேற்ற உற்சவம் நடக்கவிருக்கும் அவ்வேளையிலாவது. கந்தபுராண கலாசாரத்தை எண்ணிடுவோம். யாழ்மண்ணில் நல்லூரின் பெருமையைக் காத்திடுவோம். புன்னெறி வழியை வெறுத்திடுவோம். புனித்தை மனதில் நிறுத்திடுவோம்.

சி. சர்மிதா
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

# எங்கள் மண்ணின்
## அடையாளமான கந்தபுராணம்





1. முருகப்பெருமானின் தோற்றம்,ஆடல்,வீரம்,அருள் மற்றும் பிறவும் விரித்துக் கூறும் பெருநூல் எது?
கந்தபுராணம்

2. கந்தபுராணத்தை தமிழில் பாடியவர் யார்?
ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார்.

3. கந்தபுராணத்தின் முதல் அடி எது?
திகட சக்கரம்.....

4. கந்தபுராணம் பாட அடி எடுத்துக் கொடுத்தவர் யார்?
ஸ்ரீ முருகப் பெருமான்

5. கந்தபுராணத்தின் ஆறு காண்டங்கள் எவை?
உற்பத்தி காண்டம்,அசுர காண்டம்,மகேந்திர காண்டம்,யுத்த காண்டம்,தேவகாண்டம், தட்சகாண்டம்

6. கந்தபுராணத்தில் உள்ள விருத்தப்பாக்கள் எத்தனை?
10346


7.புராண நன்னாயகம் என்று சிறப்பிக்கப்படும் நூல் எது?
கந்த புராணம்

8. கந்த புராணத்தின் யுத்த காண்ட இறுதி நிகழ்ச்சியின் மறை பொருள் என்ன?
ஞான சக்தியாகிய வேலின் தாக்கத்தால் ஆணவ மலம்,வலுவிழுந்து ஆன்மா பரம்பொருளின் திருவடிகளை அடைதல் என்பதே இதன் மறைபொருள்.

9. கந்தபுராண கலாசாரத்தை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தவர் யார் ? அவரது காலம் எது?
கச்சிக் கணேசையர்
இவர் கந்தபுராணம் அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு அதன் போது பெற்ற ஏட்டை கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் கந்தபுராண மரபை ஏற்படுத்தினார் என்பர். எனவே இவர் காலம் கச்சியப்ப சிவாச்சார்யரின் கி.பி 12 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

10. கந்தபுராணம் பேசும் முருக விரதங்கள் எவை?
வார விரதமான சுக்கிரவாரம், நட்சத்திர விரதமான கார்த்திகை, கந்தசஷ்டி விரதம்

# எவர்க்கும் மிகப்பெரியோன்



வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத பரம்பொருள் இனிமையும் அழகும் மகிமையும் கூடி முருகன் என்ற வடிவில் அடியார்களுக்கு அருள்புரிகின்றது என்ற தத்துவத் தெளிவை அருணகிரிநாதர் பலவாறு பறைசாற்றுகிறார்.

அரிகேசவன் தன் மருகோனே, பரமேச்சுரன் தன் அருள்பாலா, இமவான் மடந்தை உத்தமி பாலா, வள்ளிமணவாளப் பெருமாளே, தேவகுஞ்சரி பாகா, இபமாமுகன் தனக்கு இளையோனே –இவ்வாறெல்லாம் கந்தனைப் போற்றுமிடங்கள் பலப்பல. ஆனால் அவரது பக்திபாவம் என்பது அம்மட்டில் நின்றுவிடுவதல்ல.

விதிமால் அறியா விமலன் புதல்வா
என்று சிவகுமாரனாகப் போற்றுவார் (விதி – பிரம்மன்). பின்பு,

நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநடமே புரிந்து அருள்வாயே

என்று சிவனாகவே துதிப்பார் (வேதன் – பிரம்மன்). சுத்த சிவமும் சுப்பிரமணியமும் வேறல்ல, ஒன்றே என்ற ஞானியரின் தத்துவ மெய்யுணர்வு இது. அவன் ஐம்முகச் சிவன், இவன் அறுமுகச் சிவன் என்று வாரியார் சுவாமிகள் இதனை ரசமாகக் குறிப்பிடுவார். அதோடு நின்று விடுவதில்லை.

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி –
அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி –
அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி –
வருவோனே..
என்கிறார்.

அகரமுமாகி – அகரமுதல எழுத்தெல்லாம் என்பது போல உலகத்திற்கு முதலாகி
அதிபனுமாகி – உலகத்தை ஆளும் தலைவனாகி
அதிகமுமாகி – அனைத்திற்கும் மேலானதாகி
அகமாகி – நான் ('அஹம்') என்னும் பொருளாகி
அடுத்த அடியில் அயன்,அரன்,அரி என்ற மும்மூர்த்திகளுமாகி, அவர்க்கும் மேலாகி என்கிறார். இது மும்மைக்கு மேலாக நான்காவதாக உள்ள துரியம் என்பதைக் குறிக்கிறது. மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார் என்று திருவாசகம் கூறுவது சம்ஹாரமூர்த்தியாகிய ருத்ரன் அல்ல, பரம்பொருளாகிய துரீயனான சிவன். விஷ்ணு என்ற நாமத்திற்கான பொருள், காக்கும் கடவுளான திருமால் மட்டுமல்ல, மும்மூர்த்திகளுக்கு அப்பாலுள்ள துரீய விஷ்ணு என்பதே என்று சங்கரர் தன் பாஷ்யங்களில் கூறுகிறார். அதே வகையில், இங்கு அருணகிரியார் சிவகுமாரனாக அல்ல, துரீய ஸ்கந்தன் என்ற நிலையில் பரம்பொருளாக முருகனைப் பாடுகிறார்.

இகரமுமாகி – இங்கு உள்ளவை யாவுமாகி (இதம்)
எவைகளுமாகி – அனைத்துமாகி (ஸர்வம்)
ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் என்ற உபநித வாக்கியமே இதில் எதிரொலிக்கிறது.

இதன் நீட்சியாகவே,
உயர்கருணை புரியும் இன்பக் கடல் மூழ்கி
உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே
எனதி யானும் வேறாக, எவரும் யாதும் யானாகும்
இதய பாவனாதீதம் அருள்வாயே
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே
என்று தூய அத்வைத நிலையில் அருணகிரியின் தெய்வவாக்கு வெளிப்படுகின்றது.

மயூராதிரூடம் (மயிலேறியவன்) என்று கூறி, உடனேயே அடுத்ததாக மஹாவாக்யகூடம் (மகா வாக்கியங்களின் மறைபொருள்) என்று ஆதிசங்கரர் சுப்ரமணிய புஜங்கத்தில் பாடுகிறார் அன்றோ?

பிரம்மமே ஆன பிரணவ சொரூபமான முருகனைப் பாடி இத்தத்துவ மெய்ப்பொருளை தியானிப்போம்.

ஜடாயு

காலைக்கதிர்
Kalaikkathir

## போதைப்பொருளுடன் பெண் கொலன்னாவையில் கைது



வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொலன்னாவை ஸ்ரீ ஆனந்தராம மாவத்தை பகுதியில் விசேட அதிரடிப்படையினர் புதன்கிழமை சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது 374 போதை மாத்திரைகள் மற்றும் 600 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த கொலன்னாவ பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் விற்பனை மூலம் பெற்றதாகக் கூறப்படும் 138,000 ரூபா பணமும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (05)

## வாழைச்சேனையில் திருட்டுகள் அதிகரிப்பு பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் உட்பட பல திருட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களை அவதானத்துடன் இருந்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை காரணமாகப் பரவலாகத் திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. திருடர்கள் தொலைவில் இல்லை உங்களுக்கு நன்கு தெரிந்தவர்களாகவும் ஏன் உங்களது உறவினர்களாகவும் இருக்கலாம். எனவே, எப்போதும் அவதானமாக இருங்கள் என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், ஒலிபெருக்கி அறிவிப்பு ஊடாகவும் பொதுமக்களிடம் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, சந்தேகத்திற்கிடமாக யாரையும் அவதானித்தால் உடடியாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய 0652257709, 0652257347 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத்தாருங்கள் என்று பொறுப்பதிகாரி பொதுமக்களை கேட்டுங்கொண்டுள்ளார். (05)

## ரயில் பெட்டியை உடைத்து திரிபோசாவை கொள்ளையிட்ட மூவருக்கு விளக்கமறியல்

சுகாதார அமைச்சின் தாய் சேய் நலன்புரித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட திரிபோசா பக்கெற்றுக்களைத் திருடி விற்பனை செய்த மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு ரயிலில் கொண்டு செல்லப்பட்ட 1,413 பக்கெற்றுக்கள் அடங்கிய 30 பொதிகளில் இருந்த திரிபோசா பக்கெற்றுக்களில் 750 கிராம் எடை கொண்ட 150 பக்கெற்றுகளைத் திருடிய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர் என மட்டக்களப்புதலைமையகபொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.கஜநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்புபிராந்தியசுகாதார சேவைகள் பணிமனைக்கு எடுத்துவரப்பட்ட மேற்படி திரிபோசா பக்கெற்றுக்களைத் திருடி விற்பனைசெய்த மட்டக்களப்பைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் மற்றும் மாவட்ட பதில் நீதிவான் எஸ்.தியாகேஸ்வரன் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

## 93 குளங்கள் வான்பாய்கின்றன 15 குளங்கள் உடைப்பெடுப்பு

### வவுனியாவில் இந்த நிலமை

வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்வதுடன், 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன எனக் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வருகின்றமழைகாரணமாகவவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையால், குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து 93 குளங்கள் வான் பாய்கின்றன. மேலும் பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளன. அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 15 குளங்கள் சிறு உடைப்பெடுத்த நிலையில் அவை தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வான் பாய்வதை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருவதுடன் நீர்நிலைகளில் மீன்பிடித்தும் வருகின்றமையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (05)

## மொரகஹா ஓயாவில் மூழ்கி ஒருவர் சாவு

பன்வில மொரகஹா ஓயா பாலத்திற்கு அருகில் சக நண்பர்களுடன் நீராடிகொண்டிருந்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பத்தேகம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இவர் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு மடோல்கலவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்தெனிய வைத்தியசாலையில் பிரேதபரிசோனைசெய்யப்பட்ட பின்னர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## கருத்து வேறுபாட்டால் வாகனங்களால் மோதிக்கொண்ட தந்தையும் மகனும்

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வாகனத்தால் மோதிக் கொண்ட சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலி - கொழும்பு பிரதான வீதியில் பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகரான தந்தை தனது வாகனத்தில் புதன்கிழமை காலை பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் தனது மீன்பிடிப் படகை பரிசோதிப்பதற்காக வாகனத்தில் சென்றபோது பேருவளையிலிருந்து வந்த மகன் பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் எதிரில் தான் வந்த வாகனத்தால் தந்தையின் வாகனத்தை மோதி சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இருவரது வாகனங்களும் பேருவளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## 11 கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் மாத்திரைகள் கட்டுநாயக்கவில் சிக்கின



கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று (வியாழக்கிழமை) மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 11 கோடி ரூபா பெறுமதியான 16 தங்க ஜெல் மாத்திரைகளைக் கொண்டு வந்த சந்தேக நபர் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு கொம்பனித்தெருவில் வசிக்கும் 32 வயதுடையவர் ஆவார்.

அவர் நேற்று காலை 01.40 மணியளவில் டுபாய் ஏர்லைன்ஸில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.



கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் பயணித்த விமானத்திற்குள் பிரவேசித்த அதிகாரிகாரிகள் அவரைக் கைது செய்துள்ளனர்.

சோதனையில் சுமார் 06 கிலோ 423 கிராம் மற்றும் 9 மில்லி கிராம் எடையுடைய தங்க ஜெல் 16 மாத்திரைகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த தங்க ஜெல் ஆய்வு அறிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அவரது கையடக்கத் தொலைபேசி தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையையும் பெற விமான நிலைய சுங்க அதி காரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த அறிக்கைகள் விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைக்கும் வரை சந்தேக நபர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (05)

## களுத்துறையில் கடத்தப்பட்ட இரண்டு மாணவிகளும் மீட்பு

களுத்துறை, ஹீனடியங்கல பிரதேசத்தில் புதன்கிழமை பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவிகள் இருவர் கடத்தப்பட்ட நிலையில் களுத்துறை தெற்கு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோவில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் மாணவிகளைப் பலவந்தமாக வாகனத்தில் கடத்திச் சென்ற நிலையில் அதனைக் கண்ட ஒருவர் மாணவிகளைக் காப்பாற்ற முற்பட்டபோது சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து பாடசாலை அதிபருக்கு தகவல் கிடைத்ததன் பிரகாரம் அவர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து களுத்துறை தெற்கு பொலிஸார் உடனடியாக விசாரணைகளைஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில், இருமாணவிகளும் களுத்துறை பொலிஸ் கல்லூரிக்கு அருகில் கைவிடப்பட்டு காணப்பட்ட நிலையில் பொலிஸாரிடம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதே பிரதேசத்தில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவரே இரு மாணவிகளையும் கடத்திச் சென்றனர் எனவும் பின்னர் இரு மாணவிகளையும் கிதுலாவமெனேரிதன்ன பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த பெண் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், மாணவிகள் தடுத்து வைக்கப்பட்டனர் எனக் கூறப்படும் வீட்டின் உரிமையாளரும், மாணவிகளை கடத்திச் சென்ற ஓட்டோவின் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தலை திட்டமிட்ட பாடசாலை மாணவன் ஓட்டோவில் வந்த இரு மாணவிகளைத் தாக்கியுள்ளார். இந்த இருமாணவிகளும்பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஓட்டோவின் சாரதி மற்றும் பெண் ஒருவரும் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

தலைமறைவாகியுள்ள 16 வயதுடைய பாடசாலை மாணவனைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ஆறு கோடி ரூபா பெறுமதியிலான குஷ் போதைப்பொருள் சிக்கியது

கணேமுல்ல பிரதேச முகவரி ஒன்றுக்கு கனடாவிலிருந்து அனுப்பப்பட்ட பொதியில் 6 கோடி பெறுமதியான 6 கிலோ கிராம் நிறையுடைய குஷ் போதைப்பொருள் சுங்க வருமான கண்காணிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் குறித்த முகவரியின் உரிமையாளர் சுங்க வருமான கண்காணிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (05)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்

## ஒன்லைன் ரக்சி அப்

ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!



YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE



+94 21 222 8358

JRIDE TAXI SERVICE

SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# மூதாட்டி கழுத்து நெரித்து கொலை 3 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

## யாழ். அல்வாய் கிழக்கு பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம் அல்வாய் கிழக்கு பகுதியில் மூதாட்டி ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்த மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி அல்வாய் கிழக்கு, அல்வாய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது 89) என்ற வயோதிப மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்டதன் காரணமாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பி. வாசுதேவா உடற்பாகங்களை இரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில், அவ்வீட்டில் இருந்த கணவன், மனைவி மற்றும் வீட்டு பணிப்பெண் ஆகிய மூவர் நெல்லியடி பொலிஸாரால் இம் மாதம் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு புதன்கிழமை மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை மூன்று சந்தேக நபர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (05)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு 25 ஆயிரம் ரூபா

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றிற்கு எதிராக கடந்த 5 வருட காலமாக நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகளின் அடிப்படையில், புதன்கிழமை உணவகம் சுகா தார சீர்கேட்டுடன் இயங்கியமையை உறுதிசெய்த மன்று உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் இயங்கி வரும் சைவ உணவகம் ஒன்று சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியதாக கடந்த 2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகரால் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது உரிமையாளர் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்க மறுத்ததை அடுத்து, மன்றில் வழக்கு விசாரணைகள் தொடர்ந்தன.

கடந்த 5 வருட காலமாக நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, உணவகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமையை மன்று உறுதி செய்ததை அடுத்து உணவாக உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது. (05)

# ராஜபக்சக்கள் ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் மூடிமறைக்கப்பட்டது எப்படி?

## அம்பலப்படுத்திய முன்னாள் பொலிஸ் உயரதிகாரி

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணையை கடந்த அரசாங் கமே நாசப்படுத்தியது என ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் வெளி நாட்டவர்கள் உட்பட 269 பேர் கொல்லப்பட்ட அதேநேரம் சுமார் 500 பேர் காயமடைந்தனர்.

தேசிய பாதுகாப்பிற்கு நெருக்கடியை ஏற்படுத்தி ஆட்சியை பிடிக்கும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களை உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் சந்தித்தார் என அசாத் மௌலானா சனல் 4 இற்குத் தெரிவித்த கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணை தடம்புரண்டமைக்கு அரசியல் தலையீடே காரணம் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன ஆஸ்திரேலியாவின் ஏபிசி ஊடகத்திற்கு அம்பலப்படுத்தியுள்ளார்.

குண்டுவெடிப்பு நடந்து 6 மாதங்களுக்குப் பிறகு ராஜபக்ச பதவியேற்றதும் அவரது தரப்பினர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர் எனவும் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அந்த நேரத்தில், ஒரு பிரதமரோ அல்லது அமைச்சரவை கூட நியமிக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து வந்த மாதங்களில், மேலும் 22 அதிகாரிகள் விசாரணையில் இருந்து நீக்கப்பட்டனர் என்றும் தனது கட்டளையின் கீழ் இருந்த 700 இற்கும் மேற்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் அரசாங்கம் விதித்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ச ஆட்சியின் சகாக்களை விசாரிக்கும் பொலிஸாரை அச்சுறுத்தும் முயற்சியாக இதனைத் தான் பார்த்ததாகவும் இது மிகவும் சட்டவிரோதமானது என்றும் இந்த நடவடிக்கையால், பல அதிகாரிகள் அச்சப்பட்டனர் எனவும் சிலர் இனி அங்கு பணிபுரிய விரும்பாமல் இடமாற்றம் கோரினர் எனவும் கூறியுள்ளார்.

சில உளவுத்துறை அதிகாரிகள் முஸ்லிம் குழுவுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்றும் அதனை கண்டுபிடித்த போது அவர்களுக்கு தடை போடப்பட்டது என்றும் இவற்றில் ஒன்று அமெரிக்க பெடரல் பீரோ ஒப் இன்வெஸ்டிகேஷன் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடந்த அன்று காலை தற்கொலை குண்டுதாரி ஒருவரின் வீட்டிற்கு இராணுவ புலனாய்வு அதிகாரிகள் சென்றனர் எனவும் ஆனால் இந்தத் தகவலை பொலிஸாரிடம் பகிர்ந்துகொள்ளவில்லை என்றும் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தகைய சந்தர்ப்பங்களில், சில தனிநபர்கள் மற்றும் குழுக்களைக் கேள்வி கேட்க முயன்றபோது, சில தடைகளைத் தாம் எதிர்கொண்டனர் எனவும் தற்கொலை குண்டுதாரிகளின் சகாக்களை விசாரணை செய்வதற்குத் தாம் இரண்டு முறை தடுக்கப்பட்டோம் என்றும் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறை தொடர்பான இரகசிய விடயங்கள் என இராணுவ உளவுத்துறை தமக்குத் தெரிவித்ததால், அவர்களைத் தாம் மேலும் விசாரிக்கவில்லை என்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைத் தடுக்க முடியும் என்று தான் நம்பிய முந்தைய விசாரணையை இராணுவ புலனாய்வு முறியடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு ஆறு மாதங்களுக்கு முன் னர், கிழக்கில் இரண்டு கான்ஸ்டபிள்களின் கொலையில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் பங்கை மறைத்து, இராணுவ புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருக்கு தவறான தகவல்களை வழங்கியிருந்தனர் என்றும் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கொலைச் சந்தேக நபர்களை கண்டுபிடிக்க முடிந்திருந்தால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை தடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தன என்றும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார். (05)

# தொலைபேசி அழைப்பு மூலமாகப் பண மோசடி

## பிரதான சந்தேகநபர் கைது

உறவினர் ஒருவருக்கு உடல் நிலை சரியில்லை என்று கூறி போலி தொலைபேசி அழைப்புகள் மூலம் பண மோசடி செய்த சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கம்பஹா மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கு சிலர் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு உங்கள் குழந்தை சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உடனடியாக சிகிச்சைக்கு ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் ரூபா பணத்தை வங்கிக்கணக்கு வைப்பிலிடுமாறும் தெரிவித்து பணமோசடி செய்துள்ளதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்து.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுதிருந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பமுனுகம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய கிராந்துருகோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், மோசடி மூலம் கிடைக்கப்பெறும் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக வெள;வேறு வங்கிகளில் கணக்கிலக்கங்களை பேணி வந்துள்ளதாகவும் இந்த சம்பவத்துடன் மற்றுமொருவர் தொடர்புபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சந்தேகநபர் புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏதேனும் காரணத்தை முன் வைத்து இனந்தெரியாத நபர் இடத்திலிருந்து தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு பணம் வழங்குமாறு கோரினால் பணம் வழங்கி இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் சிக்க வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ குறிப்பிட்டிருந்தார். (05)

# மாடுகளை கடத்திய இருவர் கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லபட்ட மாடுகளுடன் இருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். நேற்று (வியாழக்கிழமை) காலை 5 மணியளவில் மடுக்கந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சிறியரக லொறி ஒன்றை வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் அதில் சோதனை முன்னெடுத்தனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மாடுகள் கடத்திச் செல்லப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து, குறித்த வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த விசேட அதிரடிபடையினர் மேலதிக விசாரணைகளுக்காக அவர்களை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அத்துடன் வாகனத்தில் இருந்து 8 பசு மாடுகள் உட்பட 14 மாடுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அவற்றை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# நூற்றாண்டு பழைமையான மரம் குடாநாட்டில் முறிந்து விழுந்தது

யாழ் நகரில் நூற்றாண்டு கால பழைமையான மரமொன்று சீரற்ற காலநிலை காரணமாக நேற்று (வியாழக்கிழமை) முறிந்து விழுந்தது.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக வீதியோரமாக இருந்த மலைவேம்பு மரமே இவ்வாறு முறிந்து விழுந்துள்ளது.

பாடசாலை முன்னால் இருந்த நிலையில் மரம் வீதிக்கு குறுக்காக விழாது வெற்றுக் காணிக்குள் விழுந்ததால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் வீதியோரமாக உள்ள மரங்கள் முறிந்து விழுகின்ற நிலையில் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# 60 மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் சிக்கியது



கனடாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் இருந்து ஒரு தொகை குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கொள்கலன் மீது சந்தேகத்தின் பேரில் சுங்க வருவாய் கண்காணிப்புப் பிரிவினர் இதனைக் கைப்பற்றியிருந்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அங்கு 6 கிலோ குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பங்குகளின் பெறுமதி சுமார் 60 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த போதைப்பொருள் கனடாவில் இருந்து கணேமுல்ல பிரதேசத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், இந்தப் பொதியின் உரிமையாளர் சார்பாக வந்த முகவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபரின் மணிவிழா நிகழ்வு சிறப்பாக முன்னெடுப்பு








கிளிநொச்சி மாவட்ட பிரபல பாடசாலையான கிளிநொச்சி மகாவித்தியாலய முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கத்தின் மணிவிழா நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு காலை 9 மணியளவில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் வைத்தியர் குகராஜா தலைமையில் இடம்பெற்றது. கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டினை தொடர்ந்து, மணிவிழா நாயகியான பாடசாலை முதல்வருக்கு மலர் மாலை அணிவித்து பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். தொடர்ந்து வாழ்த்துரைகளும், கௌரவிப்புகளுடம் இடம்பெற்றதுடன், கலை நிகழ்வுகளும் விழா மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த மணிவிழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், குறித்த பாடசாலையின் முன்னைநாள் அதிபருமான சி.சிறிதரன், மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வுநிலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.(05)

## அரசின் வரவு - செலவுத் திட்டத்தை விமர்சிப்பதால் மக்களுக்கே பாதிப்பு

### அகிலவிராஜ் கூறுகிறார்

வரவு செலவுத் திட்டத்தை விமர் சிப்பதால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில் -

’தற்போது நாடு இருக்கும் நிலைவரத்திற்கு இம்முறை வரவு செலவுத் திட்டமானது சிறந்த வரவு செலவுத் திட்டம் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

இன்னும் கொஞ்சம் காலத்தில் இந்த நாடு கட்டியெழுப்பப்படும் என்று எதிர்க்கட்சிகளுக்கு தெரியும்.

அவ்வாறு நாடு சிறந்த நிலைக்கு கொண்டு வரப்பட்டால் அவர்களால் அரசியல் நடத்த முடியாது.

ஆகவே தான் வரவு செலவுத் திட்டம் குறித்து முரணான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள்.

தற்போது முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் இன்றி மாற்று வேலைத்திட்டங்களை யாராவது முன்வைத்திருக்கின்றார்களா?

இவ்வாறு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை விமர்சித்து தடுப்பதன் மூலம் அப்பாவி பொதுமக் களே பாதிக்கப்படுவார்கள. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது

2023 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் த புலமை பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.

பரீட்சை பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத்திற்கு சொந்தமான https://doenets.lk/ என்ற இணையத்தளத்திற்குள் பார்வையிடலாம்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2023இல் வெளியிடப்பெற்றது.